செய்தி வெளியீடு எண் : 1410 நாள் : 10.09.2024

**<u>மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் மாண்புமிகு ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் அவர்களுக்கு அளித்துள்ள பதில்கள்</u>**

மாண்புமிகு அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் அவர்களின் கனிவான கவனத்திற்கு

1930–கள் மற்றும் 60–களின் வரலாற்று இயக்கங்களில் வேரூன்றிய இருமொழிக் கொள்கையின் வாயிலாகத் தமிழ்நாடு தன்னுடைய மொழியியல் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதில் எப்போதும் உறுதியாக இருந்துவருகிறது. தமிழை எங்களுடைய அடையாளத்தின் தூணாக ஏற்றுக்கொள்ளும் அதே வேளையில் எதிர்காலத் தலைமுறையினர் ஆங்கிலப் புலமை பெறுவதையும் நாங்கள் உறுதிசெய்கிறோம்.

கேள்வி ஒன்றுக்கான பதில்:

எங்களுடைய கொள்கை எப்போதும் தமிழை அடிப்படையாகக் கொண்டு, அனைத்தையும் உள்ளடக்கிய கற்றலுக்கு முன்னுரிமை அளித்துவரும் அதேவேளையில், மாணவர்களுடைய ஆங்கில அறிவையும் மேம்படுத்துகிறது.

கேள்வி இரண்டுக்கான பதில்:

எங்களுடைய மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், வேலைவாய்ப்பில் சம நிலையினை உருவாக்கிட போட்டித் தேர்வுகளைத் தமிழில் நடத்த வேண்டும் என ஒன்றிய அரசுக்குத் தொடர்ந்து கோரிக்கை விடுத்துவருகிறார்.

கேள்வி மூன்றுக்கான பதில்:

பொறியியல், மருத்துவம் போன்ற தொழில்நுட்பப் பாடங்களைக்கூட மொழிபெயர்த்து, தமிழில் கற்றல் கருவிகளை வெளியிடுவதில் தமிழ்நாடு முன்னணி வகித்துவருகிறது.

கேள்வி நான்குக்கான பதில்:

தமிழ்நாட்டின் கொள்கைகள் ஏற்கெனவே முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப்பெண், நான்முதல்வன், இல்லம் தேடிக் கல்வி, தமிழ்ப் புதல்வன், எண்ணும் எழுத்தும் போன்ற திட்டங்களின் வாயிலாக முழுமையான மற்றும் உள்ளடக்கிய பண்புகளைப் பிரதிபலிக்கின்றன. இவை, தேசியக் கல்விக் கொள்கைக்கு முந்தையவை மற்றும் அதன் இலக்குகளுடன் பொருந்திச்செல்பவை.

இறுதியாக, தமிழ்நாடு ஏற்கெனவே தன்னுடைய சொந்த முன்னெடுப்புகளின் வாயிலாக, தேசியக் கல்விக் கொள்கையின் ஏற்றுக்கொள்ளக்கூடிய பல்வேறு அம்சங்களையும் செயல்படுத்திவருகிறது. இருப்பினும், மும்மொழிக் கொள்கை, பாடத்திட்ட மாற்றங்கள் போன்ற குறிப்பிட்ட அம்சங்களைத்தான் நாங்கள் ஆட்சேபிக்கிறோம். ‘சமக்ர சிக்ஷா’ நிதியைத் தேசிய கல்விக் கொள்கை உடன்பாட்டுடன் இணைப்பது, கல்வி தொடர்பாக மாநில அரசுக்கு அரசமைப்பு வழங்கியுள்ள சுயாட்சியை மீறுவதாகும்.

எனவே, தேசிய கல்விக் கொள்கையுடன் இணைக்கப்பட்ட நிபந்தனைகள் இல்லாமல் ‘சமக்ர சிக்ஷா’ திட்டத்தின்கீழ் நிலுவையில் உள்ள நிதியை விடுவிக்க வேண்டுமென ஒன்றிய அரசை வலியுறுத்துகிறோம்.

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள:

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in TNDIPR, Govt.of Tamil Nadu